மலர் 9 இதழ் 5

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்

## உள்ளே . . . !


தாயினும் நல்ல தலைவன்

பாடசாலை நாடகம்

பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?

கவிதை அரங்கம்

மோட்டி அஸ்ரார்

மலேரியாத் தடுப்பு இயக்கம்

பாத்திமா சிரித்தாள்!

ஐவகைப் புலி

குறள் காட்டும் நெறி

சொல்லாக்கப் போட்டி

பங்குடைமை அறிமுகம்



கௌரவ ஆசிரியர்:

மு. க. சுப்பிரமணியம்

சதம் 30 15-9-71


## பாரதி மேன்மை வாழ்க!

ஏட்டிலே கிடந்த பாட்டை
வீட்டிலே கொணர்ந்து தந்தான்
கூட்டிலே இருந்த செல்வக்
குழந்தையைத் திறந்து பூட்டை
நாட்டிலே உலவ விட்டான்
நாவிலே குலவ விட்டான்
பாட்டினுற் பாலித் தானே
பாரதி பார தத்தை!

பாமரர் வாயி லெல்லாம்
பாமணம் வீச வைத்தான்
தீமைகள் தம்மைப் பற்றித்
தீயென எரித்துத் தீர்த்தான்
ஊமையர் குருட ரெல்லாம்
உக்கிர விழிப்ப டைந்து
தாழுயர் மனித ரென்று
தலைப்படப் பாடல் செய்தான்!

புதுயுகக் கவிஞ னென்றும்
புரட்சிசெய் புலவ னென்றும்
விதியினை மாற்ற வந்த
விடுதலைக் கவிஞ னென்றும்
பொதுசனப் புலவ னென்றும்
புவியினர் போற்றி நாளும்
விதம்வித மாக ஏற்றும்
பாரதி மேன்மை வாழ்க!

— வி. கந்தவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு வெளுத்தது

கிழக்கு வெளுத்தது
கிளிகள் அழைத்தன
மளக்கென் றெழுந்திரு - பாப்பா
மழலையமுதமே பாப்பா
காக்கையும் குருவியும்
கதை சொல்லுகின்றன
கேட்க நீ ஓடிவா - பாப்பா
கேட்டொரு கதை செல்லுபாப்பா
தோப்பு வனமெல்லாம் - பாப்பா
சுகமான வாசனை
பூப்பறித் தாடுவோம் - பாப்பா
பொன் வண்டழைத்தது பாப்பா
இன்ப வுலகத்தில்
எல்லாரும் எல்லார்க்கும்
அன்புடன் வாழுவோம் பாப்பா
அது பொது வேதமாம் பாப்பா.

- சுத்தானந்த பாரதியார்.

## மாணவர் மன்ற அங்கத்தவர்

95. செல்வி மாலதி யோகரத்தினம், யோக வாசா, கொடிகாமம்.
96. செல்வன் பா. ஆனந்தகிருஷ்ணன், மாவட்ட நீதிபதி பங்களா, புத்தளம்.
97. செல்வன் க. புவனேந்திரன், 7ஆம் தரம்
சென். மேரிஸ் அரசினர் தமிழ் வித்தியாலயம், புத்தளம்.
98. செல்வன் ஆ. அமிர்தலிங்கம், கிறீன்லண்ட்ஸ் போசனசாலை,
32, மெயின் வீதி, புத்தளம்.
99. செல்வி ஸ்ரீ. நகுலவதனி, c/o திரு. ஸ்ரீராகவன்,
நீர்ப்பாசனக் கந்தோர், புத்தளம்.


### வெற்றிமணி விற்பனையாளர்

திக்குவல்லை : M. J. M. AnverKhan.
Free Casel, Muslim St, Dickwelai.

பூண்டுலோயா: எஸ். கறுப்பையாபிள்ளை,
12, மேட்டுக்கடை, பூண்டுலோயா.

புத்தளம்: க. விசாகரத்தினம்,
கிறீன்லண்ஸ் ஹோட்டல், 32-பிரதானவீதி, புத்தளம்.

மருதமுனை: 'மருதூர்வாணன்'
'தேன்மதி' நூலகம், மருதமுனை.


# தாயினும் நல்ல தலைவன்

இரசிகமணி கனக. செந்திநாதன்

'தாயேயாகி வளர்த்தனை போற்றி' என்றும், 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்றும் ஊனுருகப் பாடியிருப்பவர் திருவாசகம் அருளிய மணிவாசகர் ஆவர். ஆனால் இங்கே அப்படி அழுபவர் வேறொரு அன்பர்.

அவர் நாயன்மார்களோடு தம்மை ஒருசேர வைத்துக் கூறவில்லை. மெய்யடியார் கூட்டத்துள் தானும் ஒருவர் என்று வீம்பு பேசவில்லை.

அவர் தம்மைப்பற்றித் தாமே கூறுகிறார்:-

இறைவா! எனக்குக் கண்களைத்தந்தாய். அந்தக் கண்களால் நின் திருக்கோலத்தைக் காணாமல், வீணாக எதைஎதையோ கண்டு களித்தேன். கண்பெற்ற பயனை நான் பெறவில்லை.

தேவே! எனக்குக் கைகளைக் கொடுத்தீர். அந்தக் கைகளால் உம்மைத் தொழாமல் யார் யாரையோ தொழுது காலத்தை வீணாகக் கழித்தேன். கைகள் பெற்ற பயனை நான் அடையவில்லை.

பிரானே! எனக்குக் கால்களைப் படைத்தீர். அந்தக் கால்களால் உன் திருக்கோவிலை வலம் வராமல் எங்கெங்கோ எல்லாம் சுற்றி அலைந்து இளைத்தேன். கால் பெற்ற பயன் எனக்குச் சித்திக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்கரசர் நாவூற, மனம் குளிர 'கண்காள் காண்மின்களோ', 'கைகாள் கூப்பித் தொழீர்', 'கால்களாற் பயனென்?' என்றெல்லாம் எடுத்தோதினுரே அவை ஒன்றும் என்செவியில் ஏற வில்லை; மனத்தில் அழுந்தவில்லை.

நான் உம்மை நினைக்கவில்லை; தொழவில்லை. எங்கேயோ போய்க்கொண்டிருந்தேன். எனது நிலையை நான் எப்படிச் சொல்வேன்?

''கண்ணுல் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகி இரு
கையால் தொழுது, உன்திருக் கோயில்
காலால் வலஞ்செய்து, உனதுபுகழ்
பண்ணுல் உருகிப் புகழ்ந்து, கண்ணீர்
பாயாத ... ... ... ... ... ''

முழுமூடனுக இருந்தேன். அறிவிலியாக நடந்தேன். ஆனுல் என்னை நீர் விட்டுவிடவில்லை. நீர் என்ன செய்தீர்? எம்பிரானே! உம் கருணை என்ன செய்தது?

''தாயாகிப் பரிந்து வளர்த்தது''

கெட்ட குழந்தைகள் தலை தடுமாறி அலைந்தாலும் தாய் விட்டுவிடுவாளா? இல்லை. அதுபோல நீயும் என்னைப் பரிந்து வளர்த்தாய். தாயினும் நல்ல தலைவன் நீ. தாயின் கருணையிலும் உன் கருணை உயர்ந்தது. அது பெருங்கருணை. உவமை சொல்ல முடியாத கருணை. ஆனுலும் தாயின் அன்பைத்தான் என்னுல் உவமையாகச் சொல்ல முடிகிறது என்கிறுர் அந்த அன்பர்.



அப்பால் தன்னை வளர்த்த, தாயைப்போலப் பேணிய தலைவனைப் பரவிப்போற்றுகிறுர். அவருடைய தலைவன் முருகன். விரிஞ்சைப்பதியில் எழுந்தருளியிருக்கும் முருகன். அவன் புகழை எப்படிச் சொன்னுலும், எத்தனைமுறை சொன்னுலும் அவருக்கு அலுப்பதே இல்லை. அவர் பாடுகிறுர்:

''விரிஞ்சைப் பதிவாழும் அண்ணுல் வருக,
உலகம் முழு தாண்டாய் வருக,
கதிதரும் எம் ஐயா வருக, ஆறுமுக
அப்பா வருக, விளங்குகதிர் வண்ணு வருக''

என்றெல்லாம் மனமுருகிப்பாடுகிறுர். முழுப் பாடலையும் பாருங்கள்:-

கண்ணுல் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகியிரு
கையால் தொழுதுன் திருக்கோயில்
காலால் வலஞ்செய் துனதுபுகழ்

பண்ணு லுருகிப் புகழ்ந்து கண்ணீர்
பாயா எனையுந் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்

அண்ணுல் வருக உலகம்முழு
தாண்டாய் வருக கதிதரு மெம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்குகதிர்

வண்ணு வருக மயிலேறு
மன்னு வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே''

அப்பாலும் அவர் சிந்தனை நீளுகிறது. சாதாரண மனிதர்கள் செய்யக்கூடிய செயல்களாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுதல், உருகுதல், கண்ணீர் சிந்துதல் ஆகியவற்றைக்கூட நான் செய்யவில்லையே. அப்படியிருக்கவும் முருகன் தன்னைப் பிறவிக் கடலில் விழாமல் காப்பாற்றிவிட்டானே என்று புளகாங்கிதமடைகிறார். பாடல் உருக்கத்தின் உச்சிக்கே போய்விடுகிறது. பாடல் இது:-

''உருகா மனமும் சிவஞானம்
உணரார் அறிவும் உனதுபுகழ்
ஓதா நாவும் ஓதக்கேட்
டுவந்தே இனிய நதிபோலப்

பெருகா விழியும் உடையேனைப்
பிறவிக் கடலில் வீழாமற்
பேணி எடுத்திங் கெனதுள்ளம்
பிரியா விரிஞ்சைப் பதிவாழும்

முருகா வருக சதுர்வேத
முதல்வா வருக வினைதீர்க்கு
முனைவா வருக மலராறு
முகவா வருக திருமாலின்

மருகா வருக மயிலேறு
மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே!''

எளிமையும், பக்தியும், உருக்கமும் நிறைந்த இப்பாடல்களைப் பாடியவர் மார்க்க சகாயதேவர். அவர் பாடிய நூல் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ். வாழ்க்கை முழுவதும் பாடிக்கொண்டே யிருக்கக் கூடிய பாடல்கள் இவை.

# பாடசாலை நாடகம்

ஏ. ரி. பொன்னுத்துரை, B. A.

பள்ளி நாடக எழுத்தாளன் ஆழ்ந்து நோக்க வேண்டிய அம்சங்களென முன்னர் ஆராயப்பட்டவற்றைத் திரட்டிக் குறிப்பிடுவது நினைவுகூர உதவுமல்லவா? எனவே அவற்றைச் சுருக்கமாக கீழே தருகிறேன்.

* மாணவர்களின் உள வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து நாடகங்களை எழுதுதல் வேண்டும்.
* நல்ல கரு அமைந்த புனிதமான சம்பவங்களைப் பெரும்பாலும் கொண்ட நாடகங்களை எழுதுதல் நற்பயன் தருவதாகும்.
* இலகுவான, மனனம் செய்யத்தக்க, அதே வேளை இலக்கிய மணம் கமழும் வசனங்களை எழுதுதல் சாலச் சிறந்தது.
* பாடல்கள் புகுத்தப்படும் பட்சத்தில் அவை தமிழ் இசை மரபையொட்டி இருத்தல் வேண்டும்.
* முழுநீள நாடகம் சிறு நாடகம் ஓரங்க நாடகம் பற்றிய அறிவை அவை எழுதப்படும்போது கையாள வேண்டிய உத்திகளை நன்கு அறிந்து எழுதுதல் மிக அவசியமாகும்.
* சமய சரித்திர இலக்கிய நாடகங்களை மாணவர்களுக்கு என எழுதும்போது, புதிய பாத்திரச் சிருஷ்டிப்பு, திரிவான சம்பவங்கள் என்பவற்றால் குழப்பியடித்தல் தக்கதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமூக நாடக எழுத்தில் கூடிய கவனம் வேண்டப்படுகிறது. கொச்சைத் தமிழ் உபயோகத்தில் கவனமும் கட்டுப்பாடும் இருத்தல் அவசியம்.
* பாடசாலையில் நடிக்கத்தக்க ஆற்றல் உள்ளவர்கள் தொகை - நாடகத்தை மேடையிட இருப்பது ஆண்கள் மட்டும் பயிலும் பாடசாலையா? அன்றி மகளிர் பாடசாலையா? - நாடகம் நடிக்க வரக்கூடிய உத்தேசச் செலவு என்ன? - பாடசாலையி லிருக்கும் மேடை வசதி எத்தகையது? - இன்னோரன்ன பல விஷயங்களைக் கருத்திலிருத்தி பள்ளி நாடகங்களை எழுதுதல் தயாரிப்பு நிலையில் பல பிரச்சனைகளைத் தவிர்க்க உதவும்.

## பாடசாலை நாடகத் தயாரிப்பு சம்பந்தமான சில குறிப்புக்கள்

தகுதியான நல்ல நாடகப் பிரதியைத் தேர்ந்தெடுப்பதுடன் நாடகத் தயாரிப்பு ஆரம்பமாகிறது. மாணவர்களின் தகைமைக்குத்தக்க இலக்கியத் தரமும், மேடைக்கு எடுக்கக்கூடிய அம்சங்கள் நிரம்பியதுமான பிரதியை தேர்ந்து கொள்வதில் முதற்கண் கூடியகவனம் செலுத்த வேண்டும்.

நடிகர் தெரிவு அடுத்த முக்கிய அம்சமாக அமைகிறது. உரத்து வாசித்தல் - பல்வேறு உணர்வுகளையும் வெளிக் கொணரும் வகையில் வாசித்தல் என்பனவற்றை எடை போட ஒரு பரீட்சையை நடிக்க விரும்புவர்கள் மத்தியில் வைத்து தலையர்யவர்களை நடிக்க வைத்தல் மேற்புடைத்து.



இத்துடன் பாத்திரங்களுக்கு ஏற்ற முக வெட்டு, தோற்றம் என்பன உண்டா என்பவற்றையும் கவனித்துக் கொள்ளுதல் அவசியம். சிலரைத் திருப்திப் படுத்துவதற்காக முகமனுக்கு நடிகர் தேர்வை வைத்தால் அது தோல்விப் பாதையில் கொண்டு சென்றுவிடும்.

அடுத்து, நாடகத்தின் கரு-கதை - காட்சிகள்- பாத்திரங்களின் தன்மை என்பன பற்றி விளக்கம் கொடுக்க வேண்டும். மாதிரிக்குச் சில காட்சிகளை வாசித்துக் காட்டுதல் சிறந்தது. வெவ்வேறு நிலைகளில் பாத்திரங்கள் எப்படி எப்படிப் பேசும் என்பதை அழுத்திக்கூறி வாசித்துக் காட்டுதல் அவசியம். அப்படியானல்தான் மனனம் பண்ணும் நோக்குடன் திரும்பத் திரும்பப் படிக்கும்போது பேசப்பட வேண்டிய முறையையும் மனதில் பதித்துக் கொள்ளுகிருன். இல்லையெனில் சினிமா நடிகர்கள் சிலரின் பாணியைத் தன்னிஷ்டம் போல் நடிக்க இருப்பவன் பின்பற்றவும் கூடும்.

ஒத்திகைகளின்போது நிலைகள் - அசைவுகள் பற்றி நல்ல விளக்கங் கொடுக்கத் தவறக்கூடாது. காரணமின்றி அசைவுகள் இருத்தலாகாது. இரசிகர்கள் பார்க்கத்தக்க வகையில் மேடையில் நிற்றல் - அசைதல் என்பவற்றில் பயிற்சி அளிக்கும் அதே வேளை இயற்கை அற்ற முறையில் அவை அமைய விடக்கூடாது. உரையாடல் நிகழும்போது பாத்திரங்களைப் பார்த்து பெரும்பாலும் சம்பாஷிப்பதேயன்றி, சபைக்குப் பிரசங்கம் செய்யும் பாணியில் பேசவிடக் கூடாது. சபைக்கு பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி நடிப்பது பொதுவாக தவிர்க்கப்பட வேண்டிய விதி என உணர்த்தினுலும், தேவை நோக்கி இடை இடையே சபையைப் பாராது பின்காட்டி நடப்பதும் பிழையல்ல என்பதை வற்புறுத்த வேண்டும். வேண்டிய அளவு உரத்து அழுத்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் அழுத்தம் கொடுத்துப் பேச பயிற்சி அளிக்க வேண்டும். மட்டுக்குமீறிக் கத்தும்படி செய்தால் அது இரசிகர்களுக்கு இன்பத்தை அளிக்காது. நடிப்பைப் பொறுத்தமட்டிலும் மிகையான நடிப்பு (Over - acting) தவிர்க்கப்பட வேண்டும். இயற்கைபோல அமையும் வகையில் நடிக்கப் பழகுவதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

— தொடரும்

---

## மூவகை உணர்ச்சிகள்

மனிதனுக்கு மூன்று உணர்ச்சிகள் உண்டாகின்றன. ஒன்று பசி உணர்ச்சி. இரண்டாவது ஆண் - பெண் பால் உணர்ச்சி. மூன்ருவது விளையாட்டு உணர்ச்சி. இந்த உணர்ச்சிகள் இயல்பாகவே உண்டாகின்றன. விளையாட்டு உணர்ச்சிகளில் பிறர் செய்வதைப்போல் நாமும் செய்து காட்ட வேண்டுமென்ற உணர்ச்சி குழந்தைப் பருவம் முதலே நம்மிடம் இருந்து வருகிறது. இந்த விளையாட்டு உணர்ச்சியில் இருந்து எழுந்ததுதான் நாடகம்.

- டி. கே. சண்முகம்.

* * * *

## குறள் தரும் நாடகம்

யானேக்கும் காலை நில நோக்கும் நோக்காக்கால்
தானேக்கி மெல்ல நகும்.



# பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?

வி. கந்தவனம், B.A.

## 4. கற்கும் முறை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இக் காலத்தில் அறிவியல் விருத்தி காரணமாகப் போக்குவரத்து வசதிகள் அதிகரித்துள்ளன; செய்தி அறிவிப்பு முறைகள் பெருகியுள்ளன. இவற்ருல் உலக நாடுகளுக்கிடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. இத் தொடர்புகள் காரணமாக உலக வரலாறு, புவியியல் அறிவு, அரசியல் நிலைமை, அறிவியல் வளர்ச்சி என்பவை பற்றி ஓரளவுக்கேனும் தெரியாமல் இவ் வுலகில் தக்கவொரு மனிதனுக வாழ முடியாத நிலைமை வளர்ந்து வருகின்றது.

எனவே, இந்த அறிவியல் உலகில்—விண்வெளி யுகத்தில்—கல்வி அறிவை எவரும் புறக்கணிக்க முடியாது.

கல்வியைப் போற்றும் எவரும் அறிவின் இருப்பிடமாகிய குருவையும் போற்றுவர். குருவை மதித்தல் என்பது வேருென்றுமில்லை—அறிவை மதித்தலேயாகும்.

மாணவர்கள் தமது ஆசிரியர்களை மதிக்கவேண்டும்; அவர் சொல்லைப் போற்ற வேண்டும். எழுத்தறிவித்தவன் இறைவனுவான். கடவுளாகக் கருதி ஆசிரியர்மாரை நாம் கனம்பண்ணுதல் வேண்டும்.

ஆசிரியர் வகுப்பிற் படிப்பிக்கும் பாடங்களை மிகுந்த அவதானத்துடன் கேட்கவேண்டும். இந்தக் கட்டம் மிகவும் முக்கியமானது. இந்த இடத்தில் மிகுந்த பொறுப்புணர்வுடன் நாம் நடந்துகொள்ளவில்லையென்ருல் எல்லாமே போய்விடும். மனத்தை ஒருவழிப்படுத்தி ஆசிரியர் சொல்வதை உற்றுக் கேட்டு உணரல் வேண்டும்.

அவ்விதம் கேட்கையில் விளங்காது போயின் உடனேயோ அல்லது பாட முடிவிலோ விளங்காத பகுதியை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். 'கற்க கசடற' என்ருர் வள்ளுவர் பெருமான். படிப்புக்குப் பகை சந்தேகம். அதனை வளரவிடுவது பெருந் தீங்கை வளர்ப்பதற்குச் சரியாகும். உடனுக்குடன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வது உத்தம மாணுக்கரின் கடனுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு எழுந்து நின்று கேட்பதற்கு வெட்கம்; ஆசிரியர் என்ன நினைப்பாரோ என்ற அச்சம்; மற்றைய மாணவர்கள் கேலி பண்ணுவார்கள் என்ற கற்பனை. இந்த வெட்கமும் அச்சமும் வேண்டாத கற்பனையும் ஒழிக! ஒழிக! ஒழிக! இவற்றுக்கு அடிமைப்படும் மாணவர் என்றைக்குமே உருப்படமாட்டார். இவர்கள்தாம் சந்தேகமென்ற இருளிலே தத்தளித்துப் பரீட்சையிற் கோட்டை விடுகின்ற பேர்வழிகள்.

பள்ளிக்கூடத்துக்கு வருவது படிப்பதற்கு. படிப்போடு தொடர்பான விடயங்களை அதுவும் எமக்குப் பாடம் புகட்டும் ஆசிரியரிடம் கேட்பதற்கு நாம் ஏன் பயப்படவேண்டும்? நாம் எமது ஐயத்தைத் தீர்த்துக்கொள்ள முயல்கையில் அது மற்றைய மாணவருக்கும் பயன்படுகின்றது. சந்தேகம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பெரும்பாலும் வேறுவேருகவே இருக்கும். வெவ்வேருன சந்தேகங்களை மாணவர்கள் எழுந்து நின்று கேட்கும்போது ஆசிரியர் தரும் விளக்கத்தால் பாடம் முழுவதுமே வெளிச்சமாகிவிடுகிறது. அப்படி வகுப்பிலே தமது சந்தேகங்களைக் கேட்க வெட்கப்படும் மாணவர்கள் ஆசிரியர்களைத் தனிப்பட்ட முறையிலேனுஞ் சந்தித்து உற்ற ஐயப்பாட்டைத் தவருது தீர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொரு பாடத்துக்கும் குறிப்புக் கொப்பிகள் வைத்திருத்தல் நல்லது. ஆசிரியர் பாடத்தை முடித்த பின்பு முக்கியமான விடயங்களை அக் குறிப்புக் கொப்பியிற் குறித்துக்கொள்ளுதல் வேண்டும்.

வகுப்பிலே அரட்டை அடித்தலைக் குறைத்துக்கொள்ளுதல் வேண்டும். அடுத்த பாடம் தொடங்கப் போகிறதென்ருல், அந்தப் பாடம்பற்றிய சிந்தனையில் ஈடுபடுதல்வேண்டும். அந்தப் பாடம்பற்றி முன்பு என்ன படித்தோம்; கடைசியாக எங்கே விட்டோம் என்பதனை நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். நினைவுக்கு வரவில்லையென்ருல் உடனே பாடப் புத்தகத்தையோ, குறிப்புக் கொப்பியையோ பார்த்துத் தெரிந்துகொண்டு புதிய பாடப் பகுதிக்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். முன்பு படித்த பகுதி தெரியவில்லையென்ருல் இன்று படிக்கப்போவது விளங்காமற் போகும். கடந்த வகுப்புக்கு வரவில்லையென்ருல் பாடத்தைப் புரட்டிப் பார்த்தும் பயனில்லை.



இந்த இடத்திலே மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வரவேண்டிய அவசியத்தை உணர்ந்துகொள்ளுதல் நல்லது. படிப்பது எமது கடமை. படித்து முன்னேறவேண்டுமென்பதே எமது நோக்கம். எந்தப் பொறுப்புள்ள மாணவனும் பாடசாலைக்கு வராமல் இருக்கமாட்டான். அதுபோலவே எந்தப் பொறுப்புள்ள பெற்ருேரும் அநாவசியமாகப் பிள்ளைகளை வீட்டில் மறிக்க மாட்டார்கள். இதனைக் கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும் நன்கு உணர்வார்கள். ஆதலால் பள்ளிக்கூடத்துக்கு வராமல் இருந்துவிட்டு அடுத்த நாள் வந்து தலையிடி, காய்ச்சல், குத்து, நோ என்று ஆசிரியர்களுக்குக் காரணங்களைக் கூறிப் பயனில்லை. அப்படிச் சாக்குப் போக்குகள் காட்டும்போது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிருேமல்லவா?

சில மாணவர்கள் பாடசாலைக்கென்று புறப்பட்டு நேரே படம் பார்க்கச் செல்கிருர்கள். பின்பு பாடசாலை முடியும் நேரம் வீட்டுக்குத் திரும்புகின்ருர்கள். இவர்களைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. இவர்கள் விலங்கினத்தைச் சேர்ந்தவர்கள். தன்னிச்சையாகத் திரிவது அற்ப இன்பத்தைக் காட்டலாம். ஆனல், அது நாளைக்கு வயிற்றுக்குச் சோறு போடுமா? நாம் இன்று கடுமையாக உழைப்பது நாளை நல்லாக இருக்கவேண்டுமென்பதற்காகவே. நாம் யாரையும் ஏமாற்றலாம். ஆனல் நம்மை நாமே ஏமாற்றி வாழ்ந்துவிட முடியாது; முடியவே முடியாது.

அக்காளுக்குத் திருமணம் என்ருல் தங்கை அடுத்து இரண்டு வாரங்களுக்குப் பாடசாலைக்கு வராமலிருப்பது என்ன நீதி? இதனல் யாருக்கு இலாபம்? சுகவீனங்கள், மிக முக்கியமான அலுவல்கள் என்பன வேறு. ஆனல் அற்ப காரணங்களை வைத்துக்கொண்டு அடுத்தடுத்துப் பாடசாலைக்கு வராமலிருப்பது படிப்பைப் பெரிதும் பாதிக்கும்; தொடர்ச்சி அறுந்துபோகும்; ஒன்றும் விளங்காது அவதிப்பட நேரும். பள்ளிக்கூடத்துக்கு வராமல், பாடங்களை ஒழுங்காக ஆசிரியரிடம் படிக்காமற் பரீட்சையிற் சித்தியடைய முடியாது.

வராத மாணவர்களின் கவனம் இரட்டி மடங்காக வேண்டும். அடுத்த நாள் பாடசாலைக்கு வந்ததும் முதல் வேலையாக இன்ன இன்ன பாடங்களில் என்ன என்ன நேற்றுப் படிப்பிக்கப்பட்டது என்பதனைத் தகுந்த மாணவர்களிடம் கேட்டறிந்துகொள்ளுதல் அவசியம். எல்லாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் கேட்டுத்தான் அறியவேண்டும் என்றில்லை. பாடத் தொடர்பைப் பார்த்து நேற்று இன்ன பகுதிதான் படிப் பித்திருக்கவேண்டும் என்றும் அறிந்துகொள்ளலாமல்லவா? எனவே, வராத நாட் பாடப் பகுதியை மீண்டும் பாட சாலைக்கு வரும்பொழுது படித்து வருதல் இன்னும் சிறப் புடையது.

ஓய்வு நேரங்களிலும், இடைவேளைகளிலும் பாடங்கள் பற்றிய நினைவில் இருத்தல் பயனுடையது. சக மாணவர்களு டன் பாடங்களைப்பற்றிஅடிக்கடி கலந்துரையாடல் வேண் டும்; விவாதித்தல்வேண்டும். இம் முறை இரு வகையான பலனைத் தரவல்லது. ஒன்று: மனதிலே பாடப் பொருள் பதியும்; இரண்டு: பாடப் பொருள் பற்றிய சந்தேகங்கள் மேலும் தீர வழிபிறக்கும். சினிமாக் கதைகளையும், சீனி மிட்டாய்க் கதைகளையும் விடுத்துச் சிந்தனையைத் தூண்ட வல்ல பாடப் பொருள் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடு படுதல் நல்லது.

வகுப்பு வேலைகளை ஆசிரியர்கள் தரும்போது அதனை வகுப்பிலேயே செய்து முடித்துவிடுதல் வேண்டும். பின்னர் ஆறுதலாகச் செய்யலாம் என்று நேரத்தைக் கடத்துதல் கூடாது. குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்து முடிக்கப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்! இப் பழக்கம் பின்பு தேர்வு மண்டபத்தில் பேருதவி செய்யும்.

வகுப்பிலே ஆசிரியர்கள் பயிற்சிகளைத் தரும்போது சிலபேர் சும்மா இருந்துவிட்டுக் கடைசி நேரத்திலே பார்த்து எழுதுவதுண்டு. தயவுசெய்து இந்தப் பார்த்து எழுதுகின்ற பழக்கத்தை வைத்துக் கொள்ளாதீர்கள். பார்த்துச் செய்வது குரங்குகள்தாம். மனிதர்கள் எனப் படுவோர் எதையும் சிந்தித்தே செய்வார்கள். படித்ததை நினைவுக்குக் கொண்டுவந்து சிந்தித்துநீங்களாகவே பயிற்சி களைச் செய்தல் வேண்டும். உங்களுக்குச் சரியெனப்பட் டதை எழுதுவதே சிறப்பு. அவை பிழையாயின் ஆசிரியர் திருத்துவார்; விளக்குவார். அதற்கேற்ப அப் பயிற்சியின் கீழ் பிழை திருத்தம் செய்து கொள்ளல் வேண்டும். அப் பிழைகளை மீண்டும் விடாதவாறு பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

— தொடரும்

**




## எங்கள் பாட்டி

— கேணிப்பித்தன் —

பாட்டி எங்கள் பாட்டி
பாட்டுப் பாடும் பாட்டி
கூட்ட விரலைப் பார்க்கும்
கூனல் விழுந்த பாட்டி.

கையில் பொல்லுங் கொண்டு
காலில் செருப்புங் கொண்டு
பையில் பழசுங் கொண்டு
பாடி வருவாள் பாட்டி.

குச்சிக் குடுமிப் பாட்டி
குட்டிக் கதைகள் சொல்வாள்
பச்சைக் குழந்தை போலே
பசப்புச் செய்யும் பாட்டி.

சுங்கான் வாயில் புகையும்
சொகுசாய் முதுகும் அசையும்
தங்கப் பாட்டி என்றால்
தருவாள் மிட்டாய் நன்றாய்.

பவுடர் பூச மாட்டாள்
பகட்டும் செய்ய மாட்டாள்
கவுணை உடுக்க மாட்டாள்
கட்ட முகுப் பாட்டி.

பாட்டி எங்கள் பாட்டி
பல்லு விழுந்த பாட்டி
பொக்கை வாயைக் காட்டி
புன்ன கைக்கும் பாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழினி

— வே. குமாரசாமி —

என்னை ஆளுமோர் இனிய யாழினீ,
மென்மை உன்மன விரல்க ளால்இளங்
கன்னி; என்உளக் கவிதை யாழினை
உன்னி உன்னிநீ உலகை ஆட்டிறாய்

கங்கு லும்மனக் கவலை யுங்கெட
இங்கி தம்எழுந் தெங்கு மோங்கிமேல்
மங்க லந்திகழ் மமதை மிஞ்சிஎம்
சங்க டங்கெடத் தமிழி சைக்கிறாய்.

முடிவி லாததோர் அடியெ டுத்துநீ
துடிது டித்திட; உரிமை வேட்கைகள்
படையெ டுத்திடும் நடைதொ டுத்துநல்
விடைகொ டுக்கிறாய் விழல்க ளுக்குமே.

விலங்கு டைந்தற விளைவு மிஞ்சவுங்
கலங்கு நெஞ்சிலே கவிதை யாற்றிறங்
குலங்கள் நாமெனுங் குதிர்வு விஞ்ச;ஐம்
புலன்க ளாற்புது முணர்வு வார்க்கிறாய்.

அன்பின் சந்நிதி அகமி கக்கனிந்
தின்ப வெள்ளமாம்; இனிய நல்லிசைத்
தென்றல் ஊதிட இதயத் தந்தியை
நின்று நின்றெழில் நிதமும் மீட்கிறாய்.

கற்ப னைச்சரக் கவிதை மாலைகள்
அற்பு தச்சுவை அழகு கொஞ்சநற்
பொற்க ரத்தினால் கவிதை யாழினைத்
தற்சி றப்புடன் தழுவி மீட்கிறாய்.

இதய வாணியென் இதய யாழினைப்
புதிய பாணியிற் பணிய வையகம்
சுதியி லோர்நறுஞ் சுகம்ம லிந்தெழப்
புதிய மோகனக் கவிதை பின்னுறாய்.

* *



## அழைப்பு!

— நீள்கரைநம்பி —

தென்னகத் திலங்கை போற்றும்
　தெவுந்தரை முனையின் தீபம்
தொன்மையாம் சரிதம் ஏற்றுத்
　தொல்புகழ் துலங்கு மூதூர்
தண்கட லோரந் தன்னை
　தாங்குதிக் வல்லை யென்று
விண்புகழ் நாமம் பூண்டு
　விளங்குநம் மூரைப் பாரீர்!

சோனகர் நடுவண் முற்றும்
　சூழச் சிங்கள வரோடு
ஆணவம் மமதை யில்லா
　அன்புறு சோதரர் போல்
காணுவோர் வியப்ப யாரும்
　கருத்துக்கள் ஒன்றி வாழக்
கானமும் பொரும் விஞ்சக்
　கருதும்திக் வல்லை யூரே!

பாங்கொலி எழுப்பும் பள்ளி
　பக்தியைத் தருமே யள்ளி
பாங்குறு பான்சா லைக்குள்
　பகவன் கௌதமரின் சாயை
ஓங்குமே இரண்டும் அங்கு
　ஒலிக்குமே 'சாந்தி, 'சாது'
வாங்குவார் கொடுப்போ ராக
　வாழும்திக் வல்லை யூரே!

இலக்கியப் பூங்கா வுக்குள்
　இன்கவி மலர்கள் பூத்து
விளங்கிடும் மணத்தை வாரித்
　தந்தவன் ''குமாரத் துங்கா''
இளமையாம் சிங்க ளத்தின்
　இனிமையைக் கண்ட ஊரும்
நலம்பெறு திக்கு வல்லை
　நண்பரே காண வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்காச்சி

— இன்பவள்ளல் —

காகா காகா காக்காச்சி
கறுப்புக் குஞ்சு நீயாச்சு
கத்திக் கத்தி என்னுச்சு?
காது ரெண்டும் செவிடாச்சு.

சாய்பல் கழுத்தைச் சாய்ப்பதேன்?
சரிந்து என்னைப் பார்ப்பதேன்?
சோம்பல் முறித்துச் சிறகையே
சும்மா சும்மா அடிப்பதேன்?

பிஞ்சுக் கையில் உள்ளதைப்
பிடுங்கித் தின்னும் எண்ணமோ?
கொஞ்சம் வேண்டும் என்றுலே
கொடுப்பேன் வாங்கித் தின்பாயே!

## எது கற்க வேண்டும்?

மகா. சண்முகம். பி. எஸ்ஸி.

எறும்பிடம்நீ எதுகற்க வேண்டும்?
சுறுசுறுப்பைத் தான்கற்க வேண்டும்!
கரும்பிடம்நீ எதுகற்க வேண்டும்?
கசக்காத சொல்கற்க வேண்டும்!

தேனீயால் எதுகற்க வேண்டும்?
தீதில்லா உழைப்பைத்தான் கற்போம்!
வானிலாவால் எதுகற்க வேண்டும்?
வளர்ந்தாலும் தேய்வுண்டு என்றே!

காக்கையிடம் எதுகற்க வேண்டும்?
கலந்துண்ணும் விதம்கற்க வேண்டும்!
குருவியிடம் எதுகற்க வேண்டும்?
கூடிமகிழ்ந் திடகற்க வேண்டும்!

'அம்மா'வென் றழைக்கின்ற ஆன்றநல்
அன்புடையோய்! எதுகற்க வேண்டும்?
தெம்மாங்குத் தமிழ்உலகில்முன்னே
தோன்றிற்று எனக்கற்க வேண்டும்!






## சீமாட்டி அஸ்ரர்

— மகாலிங்கம் இளங்கோவன் —

பிரித்தானியப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பெண்மணி என்ற புகழ் சீமாட்டி அஸ்ரருக்கே உரியது. இவர் பாராளுமன்றத்துட் புகுந்த பின்னர் அடிக்கடி சேர் வின்ஸ்ரன் சேர்ச்சிலுடன் விவாதங்களில் மோதியுள்ளார்.

சிறந்த பேச்சு வன்மை படைத்த சீமாட்டி அஸ்ரர் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் கொண்டிருந்த அதிருப்தி அவரது பாராளுமன்ற விவாதங்களிலும், அவர் பாராளுமன்றத்திற் கொண்டு வந்த மசோதாக்களிலும் பிரதிபலித்தது.

ஒரு பாராளுமன்ற விவாதத்தில் சேர் வின்ஸ்ரனை நோக்கி சீமாட்டி அஸ்ரர், ''நீர் எனது கணவனுக இருந்தால், உமது தேநீரில் விடம் கலந்து தந்திருப்பேன்'' எனக் காரசாரமாகக் கூறினுர். இதற்கு சேர் வின்ஸ்ரன் படார் என விடையளித்தார். ''ஆம் சீமாட்டி, உமது கணவனுக இருக்க வேண்டிய துரதிஷ்டம் எனக்கு ஏற்பட்டிருந்தால் நான் அதைக் கட்டாயம் வாங்கிக் குடித்திருப்பேன்'' என்றுர்.

ஆனுல் சீமாட்டி அஸ்ரர் குறைந்தவரல்லர். எதிர்பார்த்த சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. ஒரு பாராளுமன்ற விவாதத்தில் சேர் வின்ஸ்ரன், ''எனது குளிப்பறைக்குள் பெண்கள் நுழைவதை நான் எப்படி விரும்பமாட்டேனே, அதே போலவே பாராளுமன்றத்துட் பெண்கள் புகுவதையும் நான் விரும்புவதில்லை'' என்று கூறினுர். உடனே சீமாட்டி அஸ்ரர், ''நீர் ஏதோ உம்மை மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதன் என்று நினைத்து விட்டீர் போலும்'' என்று ஒரு போடு போட்டார்.

சீமாட்டி அஸ்ரர், ஆங்கில நாடக ஆசிரியர் பேனுட் ஷோ போன்றவர்களுடன் நட்புரிமை பூண்டவர். சோவியத் யூனியன் உட்படப் பல ஐரோப்பிய நாடுகளை அவர் சென்று தரிசித்துள்ளார். சோவியத் யூனியனிலுள்ள மாமேதை லெனினுடைய கல்லறைக்கும் சென்று தனது மரியாதையைத் தெவித்துள்ளார்'

## மலேரியாத் தடுப்பு இயக்கம்

(செல்வி அ. பரமேஸ்வரி, காரைதீவு.)

''நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வம்.'' ஒருவருக்கு எவ்வளவு செல்வந்தான் இருந்தாலும் அவன் நோயினல் பீடிக்கப்பட்டு வருந்துவானுனல் செல்வமிருந்தும் அனுபவிக்கமுடியாத ஒரு துர்ப்பாக்கியசாலியாகிறுன் அவன். எனவே ஒவ்வொருவரும் நோயின்றிவாழ்வதுதான் சிறந்தது. இன்று உலகத்தில் எத்தனையோ விதமான சிறுசிறு நோய்களும், தொற்று நோய்களும் இருக்கின்றன. தீவிரமாகப் பரவக்கூடிய மிகக் கொடிய நோய்களுமுண்டு. இத்தொற்றுநோய்களில் சில காற்றினுலும் இன்னும் சில 'நோய்காவிகள்' ஆக இருக்கும் நுளம்பு போன்றவற்ருலும் பரவக்கூடியன. இவைகளின் மூலமாகத்தான் ஒரு சுகதேகியை நோய்வந்தடைகின்றது. நுளம்பினுல் பரவக்கூடிய நோய்களில் யானைக்கால்நோய், மலேரியா என்பன முக்கியமானவை.

இந்நோய்கள் எப்படிப்பரவுகின்றன என்றும் இவற்றைப் பரப்பும் நுளம்பின் வளர்ச்சிபற்றியும் பார்ப்போம். மலேரியாவைப் பரப்பும் இந்நுளம்பு 'அனேபிலிசு' என்றழைக்கப்படும். இது பெயரளவில் சிறியதாக இருந்தாலும்செயலளவில் மிகவும் பெரிய வீபரீத விளைவுகளை மக்களில் ஏற்படுத்துகின்றது. இவை பொதுவாக தமது முட்டையிடும் பருவத்தை நீரிலேயே ஆரம்பித்துப் பின்னர் விருத்தியடைகின்றன. மழைக்காலங்களில் நமது வீடுகளில், சிரட்டைகளிலோ அல்லது தகரப்பேணிகளிலோ மழைநீர் தேங்கி நிற்கின்றன. இந்நீரிலே நுளம்பு முட்டைகளை இடுகின்றது. சில நாட்களாகத் தேங்கிநிற்கும் நீர் அழுக்கடைந்து துர் நாற்றமடைகின்றது. இது நுளம்பின் வளர்ச்சிக்கு நன்கு உதவி செய்கின்றது. எனவே நீரிலிடப்பட்ட முட்டைகள் சூரிய உஷ்ணத்தின் மூலம் வெடிக்கின்றது. வெடித்த முட்டைகளிலிருந்து 'குடம்பி' பருவம் தோன்றுகிறது. இக்குடம்பிகள் சிறியவைகளாக, தலையும் வாலும் கொண்ட சிறு புழுக்களாகக் காட்சியளிக்கும். இவற்றை நீர் தேங்கிநிற்கும் இடங்களில் நாம் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. இக்குடும்பி சில நாட்களில் உருமாற்ற மடைந்து நுளம்பாக மாறுகின்றது. இது சாதாரண ஒரு நுளம்பின் வாழ்க்கைப் படிகளாகும். இது போலவே தான் நுளம்பினத்தைச் சேர்ந்த 'அனேபிலிசு' நுளம்பு தனது சந்ததியை விருத்தி செய்கின்றது.

'அனேபிலிசு' நுளம்பில் ஆண்நுளம்பு மரங்களின் சாற்றையே உணவாக, உறிஞ்சி வாழுகின்றது. ''ஆவதும் அழிவதும் பெண்ணுலே'' என்பதுபோல் பெண் நுளம்புதான் மனிதருக்கு அழிவையும் தேடித் தருகின்றது. இது 'பிளாஸ்மோடியம்' எனப்படும் முதற்கலஉருவின் இருப்பிடமாக இருக்கின்றது. இந்த முதற்கலஉரு தனது ஆரம்ப வளர்ச்சியை பெரும்பாலும் 'அனேபிலிசு' நுளம்பின் உடலினுள்ளேயே கழிக்கின்றது. அதன் பின்னர் நுளம்பின் கொடுக்கின் மூலம் எமது உடலினுள் அரை வளர்ச்சியுடன், குறை ஒட்டுண்ணியாகச் செலுத்தப்பட்டு மனிதரின் உடலினுள்ளே முழு வளர்ச்சி அடைகின்றது. இந் நுளம்பு சுகதேகியான ஒரு மனிதனுக்குக் குத்தும் போது தனது உடலிலுள்ள கிருமிகலந்த இரத்தத்தை சுகதேகிக்குச் செலுத்தி அவரிலுள்ள சுத்த குருதியைத் தான் உறிஞ்சிக் கொள்கிறது. இதன் மூலம்தான் சுகதேகியை நோய் வந்தடைகின்றது. வயிறு நிரம்ப இரத்தம் குடித்ததும் நீரிலே முட்டைகளாக இட்டுத்தள்ளுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நுளம்பு கிருமியின் வளர்ச்சி ஊடகமாகவும் நோய்வழங்கியாகவும் இருக்கின்றது. எனவே மலேரியா நோய் வராமல் தடுப்பதற்கு முதலில் இந் நுளம்புகளை அழிக்க வேண்டும்.

இந் நுளம்புகளை அழிப்பதற்காகத்தான் நமது வீடுகளில் மூன்றுமாதத்திற்கொரு தடவை டி.டி.ரி. மலத்தின் போன்ற கிருமிகொல்லிகள் தெளிக்கின்றார்கள். மலேரியா வராமல் தடுத்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் 'மலேரியாத் தடுப்பு இயக்கம்' மக்களால் போற்றத் தக்கதாகும். நுளம்புகள் மூலைமுடுக்குகள். அடர்ந்த பற்றைகள் போன்றவற்றிலிருந்து முட்டையிடும் பருவங்களிலேயே நீரை நாடுகின்றன. எனவே அவை வாழுகின்ற இடங்களில் தான் மருந்து தெளிக்கவேண்டும்' இதை அழிப்பதற்காக மலேரியாத் தடுப்பு இயக்கத்தார் நமது வீட்டின் சமயலறை உட்பட எல்லா இடங்களுக்கும் மருந்துதெளிக்கின்றனர். ஆனால் இதையறியாத சிலர் மருந்து தெளிக்க வருபவர்களைக் கண்டதும் வீட்டைப் பூட்டிச் சாவியை இடுப்பில் சொருகிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிடுகின்றனர். இதனால் மருந்து தெளிக்க வருபவர்கள் தங்கள் அட்டைகளில் 'அப்ஸெண்ட்' என்று எழுதுவதைத் தவிர வேறுவழியின்றித் திரும்புகின்றனர். ஆனால் அந்த வீடுகளில் தப்பித்தவறி ஒரு நுளப்புதானும் இருந்துவிட்டால் அது எவ்வளவு விரைவில் பரவி எத்தனை வீடுகளில் உள்ளவர்களுக்கு மலேரியாவைப் பரப்பும் என்பது தெரிந்தால் இதைச் செய்யமாட்டார்கள். சிலர் மருந்துதெளிக்க விடாமல் தடுக்கின்றனர். இது மிகப் பெரிய குற்றமாகும்.

இத்துடன் நோய் வராமல் தடுப்பதற்கு ஒவ்வொரு வருக்கும் அரசாங்கத்தாரால் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. இத்தடுப்பு ஊசிகளினால் மூன்று நான்கு வருடங்களுக்கு மலேரியா வராமல் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். இம்முறை 'பாதிக்கப்படாமை' என்று சொல்லப்படும். எனவே நம்மைநோயினின்றும் பாதுகாக்க அரசாங்கம் எத்தனையோ இலவச வைத்தியசாலைகளைக் கட்டுவித்து இலவசமாக மருந்தும் வழங்குகின்றது.



இதனால் நோய் வந்ததும் உடனடியாக ஒரு தகுந்த டாக்டரிடம் சென்று சிகிச்சை செய்யவேண்டும். நோய்கள் வந்ததும் நாம் கவனியாமல் கவலையீனமாக இருந்தால் பின்னர் வருந்தவேண்டியவர்களாக இருப்போம். நாம் சுத்தமாக இருந்தால் இலகுவில் நம்மை நோய்கள் வந்தடையா. எனவே, நாம் மழைக்காலத்தில் சிறுபாத்திரங்களில் நீர் தேங்கவிடாது கவனிக்க வேண்டும். அத்துடன் வீட்டின் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

இந்த முறைகளினால் நுளம்பின் விருத்தியை வீடுகளிலே நாம் தடைசெய்யக்கூடியதாய் இருக்கும். ''சுத்தம் சுகம் தரும்'' என்னும் முதுமொழிக் கிணங்க சுத்தமுடையவர்களாக நோயற்றவர்களாக வாழ்வோமாக!

முஸ்லிம் சிறுவர் கதை

## பாத்திமா சிரித்தாள்!

பலப்பிட்டி - அரூஸ்

அங்கு மலைகள். ஆம்! இரு பெரிய மலைகள். அந்த மலைகளுக்கிடையே ஒரு பள்ளத்தாக்கு. அவ்விடத்தில் மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அழகான இயற்கைக் காட்சி. அந்தப் பள்ளத்தாக்கில் ஒரு குடிசை. அந்தக் குடிசையில் அம்மா, அப்பா, ஒரு சிறிய மகள். அந்தக் குடிசையில் இந்த மூன்று ஜீவன்களுமே வாழ்ந்து வருகின்றனர். அந்த அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இருந்த அந்த அன்பு மகளின் வயது ஆறு. அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வயது. இயற்கையோடு இணைந்து வாழும் பிள்ளை அது.

ஒரு நாள்-

''பாத்திமா! தீ மூட்ட விறகு கொஞ்சம் பொறுக்கி எடுத்துவா'' என்று அன்புக் கட்டளை இட்டாள் பாத்திமாவின் தாய்.

அன்னையின் கட்டளையை ஏற்ற பாத்திமா விறகு பொறுக்கச் சென்றாள். பள்ளத்தின் நடுவில் விறகுத் துண்டுகளைப் பொறுக்கும்போது ஒரு சத்தம் கேட்டது.

''யார்?'' என்று பாத்திமா கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யார்?' என்று எதிரில் இருந்து பதில் சத்தம் கேட்டது.

பாத்திமா உடனே, வீட்டுக்கு ஓடினாள். நடந்த விடயத்தை அம்மாவிடம் கூறினாள். பாத்திமாவின் தாய்க்கு உண்மை புரிந்துவிட்டது. எதிரொலிதான் பாத்திமா சொன்னதையே சொல்லக்காரணமாக அமைந்தது என்பதை உணர்ந்தாள்.

இதை விளங்கவைப்பதற்காகப் பாத்திமாவின் தாய் ஒரு கண்ணாடியைப் பாத்திமாவின் கையில் கொடுத்து, அந்தக் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு அழும்படி சொன்னாள். பாத்திமாவும் அப்படியே செய்தாள். கண்ணாடிக்குள்ளும் ஒரு முகம் அழுதது. சிரிக்கும்படி அம்மா சொன்னாள். பாத்திமா சிரித்தாள். கண்ணாடிக்குள்ளிருக்கும் முகமும் சிரித்தது.

அப்போது பாத்திமாவின் தாய் சொன்னாள்:- ''கண்ணாடி போலத்தான் உலகமும். நீ உலகத்தைப் பார்த்து ''யார்?'' எனக்கேட்டால் ''யார்?'' என்றே எதிர்க்குரலும் எழும்பும். இதே போலத்தான் உலகம்... மக்கள்... சமுதாயம்... கண்ணாடியும், எதிரொலியும் போன்றவை. நீ சிரித்தால் அதுவும் சிரிக்கும். நீ அழுதால் அதுவும் அழும். ஆதலால்தான், முஹம்மது நபியவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார் ''நீ உனக்கு மற்றவர்கள் எதைச்செய்ய வேண்டுமென்று நினைக்கிறாயோ, அதையே நீ மற்றவர்களுக்கும் செய் என்று இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது'' என்றாள் பாத்திமாவின் தாய்.

பாத்திமா அன்று புதுப்பாடம் படித்தாள். பாத்திமா சிரித்தாள். உலகம் சிரிக்க வேண்டும் என்பதற்காக.

**

நகைச்சுவைச் சித்திரம்

# ஐவகைப் புலி (3)

## 'சிக்கனப் புலி' சின்னப்பு

— நெல்லை தாசன் —

லொடக் லொடக்! லொடலொடக்! டொட்டொடக்! டொட்டொடக்! இதென்ன அதிசயச் சத்தம் என்று திகைக்காதீர்கள். நமது 'சிக்கனப் புலி' சின்னப்புவைச் சுமந்து வரும் இரண்டு சில்லு வாகனம் எழுப்பும் அதிசய ஒலிதான் அது. ஒரு சைக்கிள் 500 ரூபா விற்கும் இந்நாளில் நமது சிக்கனப் புலியின் சைக்கிள் 5 ரூபாதான் பெறும் என்றால் அவரின் சைக்கிளின் நிலையையும், சிக்கனத்தின் தன்மையையும் நான் சொல்லியா தெரிய வேண்டும்!



கடைத் தெருவுக்குச் சென்றாலென்ன, காய்கறிச் சந்தைக்குச் சென்றாலென்ன சுற்றிச் சுற்றித் திரிந்து எங்கு மிக மிக மலிவான விலையிற் பொருட்கள் கிடைக்குமோ அங்குதான் சிக்கனப் புலி பொருட்களை வாங்குவார். அதற்காகத் தரங்குறைந்த பொருட்களை ஒரு போதும் வாங்க மாட்டார்.

''ஐந்து பணத்துக் குதிரையும் வேண்டும்
ஆறுகடக்கப் பாயவும் வேண்டும்''

என்ற நிலையிலிருப்பவர் அவர்.

அவரின் மகனும், மகளும் சம்பாதித்துக் கொண்டு வரும் பணத்தை மெதுவாகப் பதுக்கி வைத்து விட்டு தான் வேலை செய்யும் கம்பனியிற் சம்பளமாக வழங்கப்படும் 150 ரூபாவை வைத்துக் கொண்டே மாதாந்தச் செலவை 'அட்ஜஸ்ட்' பண்ணத் தவியாய்த் தவிப்பார்.

தனது வீட்டிற் சிக்கனத்தின் முன்மாதிரியாகத் தான் நடக்க வேண்டுமென்பதற்காகவே தினமும் லொடலொட மிதிவண்டியிற் காரியாலயம் செல்வதுடன் கிழிசல் விழுந்த ஆடைகளையும் அணிந்து கொள்வார்.

அவரின் மகனோ, மகளோ ''சிக்கனம் மூடத்தனமானது எல்லோரும் கசவாரம் என்பார்கள்'' என்று கூறிவிட்டாற் போதும் ''எட அவங்கள் கிடக்கிறாங்கள். இந்த அயர்லாந்திலை இருக்கிற வெள்ளைக்காரர் கூடச் சிக்கனமாய்த்தான் சீவிக்கினம். ஒருமுறை ஓர் ஐரிஷ்காரர் பல மைல் நடந்து சென்றபோது தனது செருப்புத் தேஞ்சு போகுமெண்டு கையிலை கழட்டிக் கொண்டு போனாராம். இதையெல்லாம் நீங்கள் கேள்விப்படயில்லையே'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விடுவார் சிக்கனப்புலி.

யாராவது விருந்தினர் வீட்டுக்கு வந்து விட்டால் சிக்கனப்புலி தமது மனைவியைப் பார்த்து ''எடி பாக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சை கொண்டா நல்ல குளிர்ந்த பச்சைத் தண்ணி இந்த வெய்யிலுக்கை தேத்தண்ணி உதெல்லாம் குடிக்கேலுமே'' என்று கூறி வெறும் பச்சைத் தண்ணீரைக் கொடுத்தே விருந்தினரை அனுப்பி வைத்துவிடுவார்.

ரோட்டில் நடந்து செல்லும்போது ஆணி, கம்பித் துண்டு, சுரை ஏதாவது கிடந்தால் எடுத்து மெதுவாகத் தனது கையோடு கொண்டு செல்லும் பையினுள் போட்டுக் கொள்வார். யாராவது பார்த்து விட்டால் ''துரும்பும் பல்லுக்குத்த உதவும் கண்டியளோ'' என்று கூறிச் சிரித்து மழுப்புவார் சிக்கனப்புலி.

அமெரிக்க வெள்ளையர் ஒருவர் ரோட்டில் கிடக்கும் கயிற்றுத் துண்டுகளையெல்லாம் அன்றாடம் பொறுக்கிச் சேர்த்துத் தான் சாவதற்கிடையில் பல தொன் கயிறு சேகரித்து விட்டாராம். அது போலத் தானும் சாவதற்கிடையில் லட்சக் கணக்கில் பணம் சேர்த்துவிட வேண்டும் எனத் தனது லட்சியத்தை மனம் திறந்து கூறுகிறார் சிக்கனப்புலி.

---

# மணமக்கள் வாழ்க

| | |
|---|---|
| செல்வன் ந. சுவர்ணராஜா<br>திரு. பூ. சு. நடராசா<br>அவர்களின் சிரேஷ்ட புத்திரன்<br>குரும்பசிட்டி, தெல்லிப்பழை. | செல்வி மா. ரேணுகா<br>திரு. அ. மாணிக்கவாசகர்<br>அவர்களின் சிரேஷ்ட புத்திரி<br>குரும்பசிட்டி, தெல்லிப்பழை. |
| செல்வன் பொ. மகாதேவன்<br>திரு. பொன்னையா<br>அவர்களின் புத்திரன்<br>குரும்பசிட்டி, தெல்லிப்பழை. | செல்வி க. மங்கையர்க்கரசி<br>திரு. V. A. கந்தையா<br>அவர்களின் புத்திரி<br>ஊர்காவற்துறை. |
| செல்வன் க. பரிபூரணநந்தன்<br>திரு. சி. கணபதிப்பிள்ளை<br>அவர்களின் கனிஷ்டபுத்திரன்<br>குரும்பசிட்டி, தெல்லிப்பழை. | செல்வி க. குணவதி<br>திரு. கனகசபை<br>அவர்களின் ஏகபுத்திரி<br>குரும்பசிட்டி, தெல்லிப்பழை. |
| செல்வன் க. தில்லைநாதன்<br>'சிவகாமிவாசா', சித்தங்கேணி. | செல்வி தி. சகுந்தலாதேவி<br>சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. |
| செல்வன் க. இராமச்சந்திரன்<br>திரு. கனகசபை<br>அவர்களின் புத்திரின்<br>கொக்குவில். | செல்வி த. அம்பிகாதேவி<br>திரு. சீ. தம்பிப்பிள்ளை<br>அவர்களின் புத்திரி<br>குரும்பசிட்டி, தெல்லிப்பழை. |



# குறள் காட்டும் நெறி

மு. சி. ஸ்ரீதயாளன், ஆசிரியர்
சென் மேரிஸ் தமிழ் வித்தியாலயம் புத்தளம்.

இரு சேனைகளுக்கிடையில் போர்மூண்டுகொண்டால் எப்பக்கம் ஜெயித்தது என்றும், ஒரு விருந்துக்குச் சென்றிருந்தால் அங்கு பரிமாறப்பட்ட உணவுகள் எவ்வாறு உண்பதற்கு உகந்தனவாயிருந்தனவென்றும் நாம் கொள்ளுவோமேதவிர அப்போரை நிகழ்த்திய சேனைத் தலைவனைப் பற்றியோ, உணவைத் தயார் பண்ணித் தந்த சுயம்பாகியைப் பற்றியோ நாம் அறிந்து கெள்வதற்கு முனைவதில்லை. அதேபோல ஒரு நூலை நாம் வாசிக்குமிடத்து அதன் சிறப்பியல்புகளைப்பற்றி அறியவிரும்புகிறோமேயல்லாமல் அதனை யாத்தளித்தவரின் வரலாற்றை அறியவேண்டுமென்ற அவா எமக்கிருப்பதில்லை. யுத்தத்திலே வெற்றியையும், சமையலிலே உருசியையும் நாம் எதிர்பார்ப்பதுபோல ஒரு நூலிலுள்ள சிறப்புக்களை அறிந்தின்புறுவதைவிட மற்றொன்றும் நமக்குத் தேவையில்லை.

திருக்குறள் ஒரு சிறந்த நூலாதலினாலே அதனை மொழிபெயர்த்துப் படித்த பிறமொழியினர் அதனைப் போற்றியபின்பே திருவள்ளுவரைப் பற்றியும், தமிழ்மொழியைப் பற்றியும் அறியவிரும்புகிறார்கள். திருக்குறள் எச்சாதியார்க்கும், எச்சமயத்தார்க்கும், எம்மொழியினர்க்கும் ஒப்பமுடிந்த உண்மைகளையெல்லாம் செப்பமாகச்சொல்லி, வையத்து வாழ்வாங்கு வாழுமுறையை வகுத்துரைக்கிறது. திருவள்ளுவர் செய்த திருக்குறள் உலகிலே மனிதன் பின்பற்ற வேண்டிய நன்னெறிகளையெல்லாம் மிகத்தெளிவாகவும், விளக்கமாகவும், பொதுவாகவும் கூறிப்போகிறது. இவ்வியல்புகளினாலேயே தமிழறியாத நாடுகளிலுங்கூட அதன் வியாபகம் அதிகமாக இருக்கிறது. வள்ளுவர் தாமருளிய முப்பாநூலிலே, அமைந்துள்ள நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களிலும், ஓரிடத்திலாவது தன்னை யாரென்றும், தன்மதம் எதுவென்றும் சாதிக்கின்ற ஒரு குறளையாவது அவர் காட்டாமலிருப்பதே திருக்குறளின் வியாபகத்துக்குக் காரணம் என்று நாம் துணிந்து கூறலாம்.

திருவள்ளுவனார் அறத்துப்பாலை இல்லறம், துறவும் எனவிரண்டாகவகுத்திருப்பது அவர் பொதுத்தன்மைக்கோர் எடுத்துக்காட்டாகும். ஒன்றுக்கொன்று ஒவ்வாத எத்தனையோ கொள்கைகளும், எத்தனையோ அறநெறிகளும் பேசப்படுகின்ற இவ்வுலகிலே, எவர்க்கும் ஒப்பமுடிந்த பொது இயல்பினவாய சிறந்த நெறிகளை இல்லறம், துறவறம் என இரண்டாக வகுத்து நாயனார் அமைத்துள்ளார். அவர் கருத்தின்படி இல்லறமே துறவறத்திலும் சிறந்ததாகத் தெரிகிறது. ''அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'' என்று பிரிநிலை ஏகாரம் கொடுத்து அவர் இல்லறத்தினைத் துறவறத்திலும் உயர்ந்ததாகக் காட்டுகிறார். அவர் 'அஃதும்' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டினுல் துறவறத்தைக் கூறினுரென்றும், அத்துறவறமானது பிறன்பழிப்பது இல்லாயின், நன்று, என அவர் கொண்டாரென்றும் நாம் அவர் நூல் வாயிலாக அறியக்கூடியதாயிருக்கிறது. அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்திலே அறம் செய்தலின் சிறப்பையும், அதனைச் செய்யும் முறையையும்,

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தா ஞேடூர்ந்தா னிடை'' – (அறன்வலியுறுத்தல்)

அறஞ்செய்தலால் இவ்வுலகிலுள்ளோர் பெறும் பெருமையின் பெற்றியையும், அதனுலே அதனைச் செய்தலின் இன்றியமையாமையையும் அவர் ஸ்திரம் செய்துபோகிருர்.

''செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி''

என்றகுறளினுல் ஒருவன் விரும்பிச் செய்யவேண்டியது நல்வினையே என்றும், அவன் வெறுத்துத்தள்ள வேண்டியது பழிதருவதாகிய தீவினையே என்றும் அவர் எமக்கெடுத்துணர்த்துகிருர். அறம், பொருள், இன்பம் என்ற மூவகை உறுதிப்பொருள்களுள் செல்வத்தையும், பொருளையும் போலல்லாது இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றையும் ஒருங்கே ஒருவனுக்குத் தரவல்லது அறம். ஆகையால் அதன் உறுதிப்பாட்டை;

''சிறப்பு ஈனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு''

என்ற குறளினுலே மிக அழகாகப் புலவர் எமக்கெடுத்துணர்த்துகிருர்.

''மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற''

என்ற குறட்பாவினுல் தருமம் செய்யுமொருவன் தன் மனத்தின் கண்ணின்றும் அழுக்காறு, அவா, வெகுளி இன்னுச்சொல் என்ற நான்கினையும் அகற்றி மனம் வாக்கு, காயம் என்பவற்ருலொருப்பட்டு அதனைச் செய்ய வேண்டுமென்றும், அன்றேல் அவன் செய்யும் தருமகாரியங்களனைத்தும் வீண் ஆரவாரமாகுமேயன்றி உண்மை அறத்தின்வழிவாராவென்றும் வள்ளுவனுர் கருதுகிருர்.

''ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெய்லாம் செயல்''

என்பது நாயனுரின் மணிவாக்கு. தருமம் செய்வதற்கு காலம், நேரம், நியதி என்பன வேண்டியதில்லை. அதனை ஆற்ற இயல்பும் வழியும், தகுதியும் செப்பமாக வேண்டுமென்பதுதான் அவர் கோட்பாடு. இருந்த உடலைவிட்டு மற்ருேருடலைப் பற்றுகின்ற உயிரானது, உடலோடு எண்ணிறந்த காலம் கழிக்கின்றதென்றும், அக்காலத்திலே அது பலவித சுகதுக்கங்களை அனுபவிக்கின்றதென்றும், அவற்றை ஒழிப்பதற்குச் சிறந்த வழி, 'பிறவாமையே' என்றும் கருதுகின்ற வள்ளுவனுர் அறத்தினை ''வானுள் வழியடைக்குங்கல்'' என்று அழகுற உவமித்துள்ளார். — தொடரும்

# யாழ் நகர் கண்ட நாடகக் கருத்தரங்கு

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 22-8-71 மாலை, மறுமலர்ச்சி மன்ற ஆதரவில் நாடகக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் நடந்த இவ் விழாவை கலையரசு, வட. உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை என்போர் சிறப்பித்தனர்.

நாடகம் எழுதல்பற்றிப் பேசிய திரு. கதிரேசர்பிள்ளை கதை - கரு பற்றியும், ஏ. ரி. பொன்னுத்துரை காட்சிகள் - பாத்திரங்கள் சில உத்திகள் பற்றியும், சொக்கன் அவர்கள் உரையாடல் பற்றியும் ஆழ்ந்த கருத்துக்களை முன்வைத்தனர். திரு. வை. தனேஸ்வரன் தலைமை தாங்கிய இக் கருத்தரங்கில் இரசிகமணி கனக. செந்திநாதன், செம்பியன் செல்வன் திரு. சண்முகலிங்கம் பீ. ஏ. என்போர் காத்திரமான கருத்துக்களை மோதவைத்து கருத்தரங்கைக் கலகலக்கச் செய்தனர். சூசகமான முறையில் அமையும் உரையாடலா, அழுத்தம் கொடுக்கவேண்டிய இடங்களில் அழுத்தம் கொடுத்து எழுதும் முறைடா பயன் தரவல்லது என்ற அம்சம் பற்றிய கருத்து மோதல் சூடு பிறக்கச் செய்தது.

தொடர்ந்து எஸ். அருமைநாயகம் தலைமையில் நாடகம் தயாரித்தல்பற்றிய கருத்தரங்கு நடந்தது. திரு. எஸ். ரி. அரசு, பிரான்சிஸ், ஏ. மகேஸ்வரன் என்போர் நடிகர் பயிற்சி - மேடைக்கேற்ற நாடகம், ஒப்பனை காட்சி அமைப்புப்பற்றிப் பேசினர். கலந்துரையாடலில் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பிரதம அதிதி திரு. முருகேசம்பிள்ளை இக் கருத்தரங்கைப் பாராட்டி, இப்படியான அரங்குகளின் அவசியத்தையும் வற்புறுத்தினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லாக்கப் போட்டி இல. 1

### முடிவுதிகதி 30-9-71

**மாணவ மன்ற அங்கத்தவர்களும் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்.**

சென்றமாதம் பாடசாலை விடுமுறையாகையால் மாணவர்களுக்கு உரியநேரத்தில் வெற்றிமணி கிடைக்கவில்லை. இதனுல் முடிவுதிகதி பின்போடப்படுகின்றது.

### சூதும் வாதும் வேதனை செய்யும்

என்றவாக்கியத்திலுள்ள எழுத்துக்களைக் கொண்டு கருத்துள்ள சொற்களை யார் கூடுதலாக ஆக்குகிருரோ அவருக்கு முதற்பரிசும் அடுத்தவருக்கு இரண்டாவது பரிசும் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு போட்டிக்கும் அட்டாளைச்சேனை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த பலப்பிட்டி அருஸ் புத்தகப் பரிசுகளைக் கொடுப்பார்.

விடைகளைத் தனிக்காகிதத்தில் எழுதி கீழேயுள்ள கூப்பனையும் இணைத்து அனுப்பவேண்டும்.

**சொல்லாக்கப் போட்டி இல. 1**

பெயர்.......................................................... அங். இல. .......

முகவரி..........................................................................

..........................................................

அனுப்ப வேண்டிய முகவரி:-

**வெற்றிமணி,**

253 1/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பங்குடைமை (Partnership)

## (1) பங்குடைமை அறிமுகம்

— வை. சி. சிவஞானம் —

### I. பங்குடைமையின் வரைவிலக்கணம்

பங்குடைமை என்பது இலாபந் திரட்டும் நோக்குடன் ஏதாவதொரு தொழிலை மேற்கொள்ளும் மக்களுக் கிடையிலுள்ள தொடர்பை வலியுறுத்துவதெனப் பங்குடைமைச் சட்டம் விளக்குகிறது. உருவாக்கல், பதிவு செய்தல் போன்ற சட்டச் சடங்குகள் பங்குடைமை அமைப்பதற்கு அவசியமில்லை. பங்குடைமையில் இலாபப் பங்கீடும், சொத்துக்களும், கடன்களும் பங்காளரின் கூட்டுரிமையாக விளங்குகிறது. ஆயினும் இலாபப் பங்கீடே பங்குடைமையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. பங்காளரின் பொறுப்புக்களுக்கும் உரிமைகளுக்கும் ஏற்ப இலாபப் பங்கீட்டு விகிதமும் அமைந்திருக்கவேண்டிய அவசியமில்லையென 1890-ம் ஆண்டு இயற்றப்பட்ட இங்கிலாந்துப் பங்குடைமைச் சட்டம் கூறுகிறது. பங்குடைமை நிலையத்துக்குக் குறித்த வீத வட்டிபெறும் நோக்குடன் கடன் வழங்கியவனைப் பங்காளனுகக் கருதமுடியாது. ஒப்பந்தத்தில் அவரையும் பங்காளனுக ஏற்பதெனக் குறிப்பிட்டு எல்லாப் பங்காளரும் கையொப்பமிடின் அவரும் பங்காளராவர். எனவே பங்காளருக்கிடையிலான ஒப்பந்தமே பங்குடைமையின் முக்கிய அம்சமாகும்.

### II. பங்குடைமை ஒப்பந்தம்

ஒரு தொழிலைத் தொடங்கிய மக்களுக்கிடையிலே ஏற்பட்டிருக்கும் உடன்பாடே பங்குடைமை ஒப்பந்தமாகும். இவ் வொப்பந்தம் எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் இருக்கலாம். எழுத்து மூலமாக இருக்கவேண்டுமெனப் பங்குடைமைச் சட்டம் வரையறுக்காது விடினும் எழுத்து மூலமாக இருப்பதே நன்று.

பங்குடைமை ஒப்பந்தத்தில் இடம்பெறவேண்டிய முக்கிய விடயங்கள்:-

(அ) நிலையத்தின் பெயரும், விலாசமும்.

(ஆ) பங்காளர் பெயர்கள், அவர்கள் வழங்கிய மூலதனத் தொகை, பங்காளரின் வகைகள்.

(இ) வியாபாரம் அல்லது தொழிலின் தன்மையும், அதை நடாத்தும் முறையும்.

(ஈ) காலம்:- எவ்வளவு காலத்துக்குப் பங்குடைமையை நடாத்தலாம் என்னும் உடன்பாடு. (காலத்தைப்பற்றி ஒப்பந்தத்தில் குறிக்கப்படாதுவிடின் ஒரு பங்காளன் இறந்தவுடன் அல்லது ஒரு பங்காளன் மூறிந்தவரென நீதிமன்றம் தீர்ப்பளித்தவுடன் அல்லது ஒரு பங்காளன் பங்குடைமையைக் கலைக்க வேண்டுமென எழுத்துமூலம் அறிவித்தவுடன் பங்குடைமை சட்டப்படி கலைக்கப் படல் வேண்டும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) ஒவ்வொரு பங்காளருமிட்ட மூலதனத்துக்கு வட்டி கொடுக்கப்பட வேண்டுமாயின் என்ன வீத வட்டி கொடுக்கப்பட வேண்டுமென்பதும், மூலதன வட்டி கொடுக்கப்படவேண்டுமாயின் அவ் வட்டி கொடுத்த பின்னரே தேறிய இலாப - நட்டத்தைக் கணித்தல் வேண்டுமெனவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடல் வேண்டும். (ஒப்பந்தத்தில் மூல தன வட்டி வீதம் குறிக்கப்படாதுவிடின் எப் பங்காளருக்கும் மூலதன வட்டி வழங்கப் படமாட்டாது.)

(ஊ) இலாப நட்டத்தைப் பங்காளர்களுக் கிடையில் பகிரும் விகிதம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படல் வேண்டும், (ஒப்பந்தத்தில் இலாப - நட்டத்தைப் பகிரும் விகிதம் குறிக்கப்படாது விடின் பங்குடைமைச் சட்டப்படி இலாப நட்டம் எல்லாப் பங்காளருக்கும் சமமாகவே பகிரப்படல் வேண்டும்.)

(எ) ஒவ்வொரு பங்காளனும் வியாபார நிலையத்திலிருந்து வருடந்தோறும் எவ்வளவு பணம் பற்றலாமெனவும் அப் பற்றுத் தொகைக்கு என்ன வீத வட்டி செலுத்தப்பட வேண்டு மென்பதும் ஒப்பந்தத்தில் குறிப்பிடவேண்டும்.

(ஏ) கணக்குகளை முடிக்கும் முறையும் காலமும் இலாப நட்டத்தை வருடத்துக்கொரு முறையோ அரை வருடத்துக்கு ஒரு முறையோ பகிரவேண்டுமென்பதும் ஒப்பந்தத்தில் குறிக்கப்படுதல் நன்று.

(ஐ) பங்காளர் யாராவது பங்குடைமைக்காகத் தொழிலில் விசேட கவனஞ் செலுத்தினுல் அப் பங்காளருக்கு ஏதாவது சம்பளம் அல்லது சன்மானம் வழங்க வேண்டுமாயின் அவ்விபரங்கள் ஒப்பந்தத்தில் குறிக்கப்பட வேண்டும். (ஒப்பந்தத்தில் குறிப்பிடாதுவிடின் பங்குடைமைச் சட்டப்படி எவ்வித சன்மானமோ அல்லது சம்பளமோ எப் பங்காளரும் பெறமுடியாது.)

(ஒ) ஒரு பங்காளன் இறந்தால் அல்லது விலகினுல் அல்லது முறிந்தவராஞல் எவ்வித நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைப்பற்றிய விபரங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட வேண்டும். (ஒப்பந்தத்தில் இவைபற்றிய விபரங்கள் குறிக்கப்படாது விடின் பங்குடமைச் சட்டப்படி இவ்வித சந்தர்ப்பங்களில் பங்குடைமை கலைக்கப்படல் வேண்டும்.)

(ஓ) புதிய பங்காளன் ஒருவனைச் சேர்க்கும் நிபந்தனைகளைவையென்பது பற்றிய விபரங்கள்.

(ஔ) பங்காளருக்கிடையே ஏற்படும் விவாதங்களை எவ்வாறு மத்தியஸ்தம் செய்யப்படவேண்டுமென்னும் நிபந்தனைகள்.

(ஃ) பங்குடைமை கலைக்கப்படும்போது சொத்துக்கள் எவ்வாறு பங்கிடப்படல் வேண்டுமென்னும் விபரங்களும், வேறு ஏதாவது உடன்பாடுகள் இருந்தால் அவைபற்றிய விபரங்களும் ஒப்பந்தத்தில் குறிப்பிடல் வேண்டும்.



பங்குடைமை ஒப்பந்தம் இல்லாவிடத்தும், பங்குடைமை ஒப்பந்தத்தில் குறிக்கப்படாத விடயங்கள் சம்பந்தமாகவும் பிரச்சினைகள் ஏற்படின் பங்குடைமைச் சட்டப்படியே தீர்வு காணல் வேண்டும்.

## III. பங்குடைமையின் வகைகள்

பங்குடைமை இரு வகைப்படும். அவையாவன:-

(அ) சாதாரண பங்குடைமை

(ஆ) வரையறுத்த பங்குடைமை

### (அ) சாதாரண பங்குடைமை

இப் பங்குடைமையில் உள்ள எல்லாப் பங்காளரும் பங்குடைமையின் கடன்களுக்கு ஒருமித்தும் தனித்தும் பொறுப்பாளராவர். பங்குடைமையிலுள்ள பங்காளரில் சிலர் முறிந்தவர்களாஞல் ஏனைய பங்காளர் கடன்களைத் தீர்க்கக் கடமைப்பட்டுள்ளனர்.

### (ஆ) வரையறுத்த பங்குடைமை

வரையறுத்த பங்குடைமை என்பது வரையறுத்த பங்காளர்களைக் கொண்ட பங்குடைமையாகும். வரையறுத்த பங்காளர் தாம் வழங்கிய மூலதனத்துக்கு மேல் வியாபார நிலையக் கடன்களுக்குப் பொறுப்பேற்க மாட்டோமென்னும் நிபந்தனையுடன் சேர்ந்த பங்காளராவர். வரையறுத்த பங்குடைமையில் கடன் பொறுப்புக்களை ஏற்பதற்குக் குறைந்தது ஒரு சாதாரண பங்காளனுவது இருத்தல் வேண்டும்.

## IV. பங்காளரின் எண்ணிக்கை

சாதாரண தொழில்கள் செய்யும் பங்குடைமையில் 20 பேருக்கு மேற்படாமலும், பணத் தொழில் சம்பந்தமான வங்கித் தொழில் போன்றவற்றில் 10 பேருக்கு மேற்படாமலும் பங்காளர் இருத்தல் வேண்டும். நியாயவாதிகள் சங்கம், கணக்காளர்கள் சங்கம், பங்குச் சந்தை போன்ற நிலையங்களுக்குச் சிறப்பு விதிகளுண்டு.

## V. பதிவு செய்தல்

பங்குடைமை வியாபாரத்தைப் பதிவு செய்யும்போது பின் வருந் தகவல்களைக் கொடுத்தல் வேண்டும்.

1. தொழிலின் பெயர்
2. தொழிலின் தன்மை
3. தொழில் அமையும் இடம்
4. ஒவ்வொரு பங்காளரினதும் குடும்பப் பெயர், முழுப்பெயர்கள்
5. பங்காளரின் சாதியம்
6. பங்காளரின் இருப்பிட விலாசம்
7. பங்காளரின் வேறு தொழில் முயற்சிகள்
8. வியாபாரம் ஆரம்பிக்குந் திகதி

இவற்றில் யாதும் மாற்றஞ் செய்யப்படின் அவை உடன் பதிவு செய்யப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI. பங்காளரின் வகைகள்

1. இயங்கும் பங்காளன்
2. தூங்கும் பங்காளன்
3. வரையறுத்த பங்காளன்
4. பெயரளவிற் பங்காளன்
5. போலிப் பங்காளன்
6. வயதடையாப் பங்காளன்

**இயங்கும் பங்காளன்**

இவர்கள் பங்குடைமைக்கு மூலதனம் வழங்குவதுடன் வியாபாரத் தொழிலை நடாத்தும் வேலைகளிலும் பங்கு கொள்வர். இவர்கள் இவ்விதம் வேலை செய்வதற்கு ஏதாவது சன்மானம் அல்லது சம்பளம் பெறவேண்டுமாயின் அவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். ஒப்பந்தத்தில் குறிப்பிடாதுவிடின் ஏனைய பங்காளர் பெறுவதுபோல இலாபம் மாத்திரம் பெற உரிமையுண்டு.

**தூங்கும் பங்காளர்**

பங்குடைமைக்குத் தம்மால் கொடுக்கவேண்டிய மூலதனத்தை வழங்கிவிட்டு தொழில் முயற்சிகளில் பங்கு பற்ருது இருக்கும் பங்காளர் தூங்கும் பங்காளரென அழைக்கப்படுவர்.

**வரையறுத்த பங்காளர்**

தாம் வழங்கிய மூலதனத்துக்குமேல் வியாபார நிலையத்தின் கடன் பொறுப்புக்களை ஏற்கமாட்டோமென்ற நிபந்தனையுடன் சேரும் பங்காளராவர்.

**பெயரளவிற் பங்காளர்**

இப் பங்காளர் மூலதனமும் வழங்குவதில்லை. தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை. அவரின் நற்பெயருக்காகப் பங்காளராகச் சேர்த்துக்கொள்வர். ஒப்பந்தத்தில் இவரின் இலாப நட்ட வீதமும் பொறுப்புக்களும் குறிக்கப்படாதுவிடின் ஏனைய பங்காளரைப் போன்று இலாப நட்டத்தைப் பகிரவும் கடன் பொறுப்புக்களைத் தீர்க்கவும் கடமைப்பட்டவர்.

**போலிப் பங்காளர்**

பங்குடைமையிலிருந்து இளைப்பாறிய பங்காளன் ஒருவன் தனது மூலதனத்தை வட்டி பெறும் நோக்குடன் வியாபார நிலையத்தில் விட்டிருக்கும் இளைப்பாறிய பங்காளரைப் போலிப் பங்காளரென அழைப்பர்.

**வயதடையாப் பங்காளர்**

வயதடையாதவர்கள் பொதுவாகப் பங்காளராகச் சேரமுடியாதெனினும் வயதடையாதவர்களின் நன்மை கருதி அவர்களைப் பங்காளராகச் சேர்ப்பதைச் சட்டம் அனுமதிக்கிறது. வயதடையாப் பங்காளன், வழங்கிய மூலதனத்துக்குமேல் வியாபார நிலையத்தின் கடன்களுக்குப் பொறுப்பல்ல. இப் பங்காளன் வயது வந்ததும் இப் பங்குடைமையில் தொடர்ந்தும் பங்காளனுக இருப்பதா அல்லது பங்குடைமையிலிருந்து விலகுவதா என்று தீர்மானிக்கும் உரிமையுண்டு. அவ்விதம் சட்டம் வரையறுத்த காலத்துள் வயது வந்தும் தீர்மானிக்காதுவிடின் ஏனைய பங்காளருக்குள்ள உரிமைகளும் பொறுப்புக்களும் இப் பங்காளருக்கு முண்டு. பின் இவர் சாதாரண பங்காளராக இயல்பாகவே மாறிவிடுவர். — தொடரும்

# யாழ். இலக்கிய வட்ட
# புதிய தலைவர் மதுரகவி இ. நாகராஜன்

ஆருவது வருடத்தில் காலடி வைக்கும் யாழ். இலக்கிய வட்ட புதிய உறுப்பினர் தேர்வு 25-8-71 கவிஞர் ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்:

**இரசிகமணி கனக. செந்திநாதன்**

தலைவர்:

**மதுரகவி இ. நாகராஜன்**

உப தலைவர்கள்:

**திரு. சு. இராஜநாயகன் பீ. ஏ.**

**திரு. தீ. ச. வரதராசன்** ('வெள்ளி' ஆசிரியர்)

காரியதரிசி:

**திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளை பீ. ஏ.**

பிரசாரக் காரியதரிசி:

**திரு. ஏ. ரி. பொன்னுத்துரை பீ. ஏ.**

பொருளாளர்:

**கவிஞர் வி. கந்தவனம் பீ. ஏ**

நிர்வாக உறுப்பினர்:

**நா. சண்முகநாதன்** **கவிஞர் குமாரசாமி**

**கே. வி. நடராசா** **கவிஞர் ஐயாத்துரை**

**செம்பியன் செல்வன் பீ. ஏ.**

கலை - இலக்கியத் துறையில் கணிசமான சாதனைகளை நிலைநாட்ட ஆக்கபூர்வமான கருத்துக்களை இரசிகமணி, ஏ. ரி. பொ., வரதர், இராஜநாயகன், யாழ்வாணன், கவிஞர் கந்தவனம் என்போர் கூறினர். செப்டம்பர் மாதத்தில் கவி பாரதி பற்றிய கருத்துப் பரிவர்த்தனைக் கூட்டம் ஒன்றை நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ் விழாவைச்சிறப்புற நடாத்த 'வெள்ளி' ஆசிரியர் வரதர் முன்வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது:

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று வளங்கும் ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
— தங்கப்பவுண் நகைமாளிகை —
கன்னதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.
K. N. M. Meeran Sahib
JEWELLERS & DIAMOND MERCHANT
— SOVEREIGN PALACE —
Kannathiddy, *Dial:* 585 JAFFNA.

கொன்றை வேந்தன்

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி பின்வருவனவற்றில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

1. கொன்றை வேந்தன் (உரையுடன்)
2. நாவலரின் நீதி வாக்கியம்
3. தேவாரப் புத்தகம் ஒன்று

மற்றும் இதர பரிசுகளுக்கு மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரியுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தபாற் பெட்டி இல. 77
யாழ்ப்பாணம்.

இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org